ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1799/10 - 2013 පෙබරවාරි 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.02.28
*1799/10 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**
அறிவித்தல்

**கொக்கோ, கராம்பு பயிரிடுதல், உற்பத்தி செய்தல், மிளகு பயிரிடுதல், உற்பத்தி செய்தல் தொழில்களிலுள்ள வேலையாட்களுக்கு வழங்கப்படவேண்டிய விசேட படிகள்**

*2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் மேற்கூறிய தொழில்களுக்கான வாழ்க்கைப்படிச் சுட்டெண் 170.7 ஆக இருப்பதால் 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் சாதாரண வேலை நாளொன்று தொடர்பாகச் செலுத்தப்படவேண்டிய விசேட படி பின்வருமாறாகும் என (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 20 (2) (ஆ) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

***கொக்கோ, கராம்பு, மிளகு பயிரிடுதல், உற்பத்தி செய்தல், தெங்கு வளர்த்தல் தொழில்கள்***

| *தொழிலாளர் வகுப்பு* | *சாதாரண வேலை நாளுக்குரிய விசேட படி ரூபா சதம்* |
|---|---|
| நாளாந்த வேதனம் பெறும் ஊழியர்கள் | |
| தொழிலாளர்கள் - ஆண்/பெண் | *519.41* |

வி. பி. பி. கே. வீரசிங்க,
தொழில் ஆணையாளர்.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
*2013*, பெப்புருவரி *28*.

*3- 1044/1*

*ச. வ. பீ. 80/34.*

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

மக்கட்டொகை, புள்ளிவிவரவியல் பதில் பணிப்பாளர் நாயகம் லிந்த முலகே பத்மினி டி சில்வா ஆகிய நான், 1944 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 3 ஆந் திகதிய 9327 ஆம் இலக்க, 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதிய 9963 ஆம் இலக்க, 1953 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதிய 10541 ஆம் இலக்க, 1958 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிய 11568 ஆம் இலக்க, 1962 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதிய 13179 ஆம் இலக்க, செய்தி மடல்களில் பிரசுரிமாகிய அறிவித்தல் மூலம் அமைச்சர் அவர்களால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 20 (2) (ஈ) ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தகைமைவாய்ந்த அதிகாரி என்ற வகையில் அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழில்கள் ஒவ்வொன்றிலுமுள்ள தொழிலாளர்களுக்குப் பொருந்துவதான 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் (2006/07 ஆம் ஆண்டின் அடிப்படையில்) 170.7 ஆகுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

எல். பி. டி சில்வா,
பதில் மக்கட்டொகை, புள்ளிவிவரவியல்
பணிப்பாளர் நாயகம்.

மக்கட்டொகை, புள்ளி விவரவியல் திணைக்களம்,
த. பெ. இல. 563,
கொழும்பு 07,
2013, பெப்புருவரி 28.

**அட்டவணை**

(1) கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தல், உற்பத்தித் தொழில்.

3- 1044/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.